# பத்திரிக்கைசெய்தி

## விவசாயிடம் பட்டா வழங்க மற்றும் நிலத்தை அளப்பதற்காக லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக தேனி மாவட்டம், மயிலாடும்பாறை பிர்கா சர்வேயர் அவர்கள் கைது

புகார்தாரர் திரு.ராமேந்திரன் தேனி மாவட்டம், மயிலாடும்பாறையில் தனது தந்தையின் பூர்வீக நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார். இவரது தந்தை அவரது நிலத்தை புகார்தாரரின் தாயார் பெயருக்கு தான செட்டில்மென்ட் செய்து கொடுத்ததால் அதற்கு புகார்தாரர் தனிப்பட்டா பெறுவதற்காக தேனி மாவட்டம், மயிலாடும்பாறை பிர்கா, தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். இது தொடர்பாக அவர் மயிலாடும்பாறை பிர்கா சர்வே அலுவலகத்தை அணுகிய போது விண்ணப்பத்தினை மேல் நடவடிக்கை செய்து பரிந்துரைப்பதற்காகவும் மற்றும் நில அளவை செய்வதற்காகவும் திரு.செல்வரங்கன், பிர்கா சர்வேயர், மயிலாடும்பாறை பிர்கா, தேனி மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.14,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை தேனி பிரிவில் புகார் மனு ஒன்று கொடுத்துள்ளார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 15.12.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.செல்வரங்கன், பிர்கா சர்வேயர், மயிலாடும்பாறை பிர்கா, தேனி மாவட்டம் அவர்கள் நான் கேட்ட பணத்தை கொண்டு வந்துள்ளீர்களா என கேட்டு அதை திரு.வீரபாண்டியன், தற்காலிக உதவியாளர் அவர்கள் வசம் கொடுக்கும்படி கூறியதன்பேரில் புகார்தாரர் லஞ்ச பணமான ரூ.14,000/-யை திரு.வீரபாண்டியன், தற்காலிக உதவியாளர் அவரிடம் கொடுத்தபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.